பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 14 வெள்ளிக்கிழமை 28.06.2024 கதிர் 233

## கிராம அலுவலர்களும் 3 நாள்கள் போராட்டம்

தங்களின் பல கோரிக்கைகளுக்குத்தீர்வுகளை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளமையை கண்டித்து மூன்று நாட்கள் கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுப்பட தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து கொடுப்பனவு,எரிபொருள் கொடுப்பனவு, சீருடை கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு போன்றவற்றைஅதிகரிக்குமாறு கோரியே இந்த தொழிற்சங்கநடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

அரச நிறைவேற்று அதிகாரிகளின்பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆளும்தரப்புவிரைவான தீர்மானங்களை எடுத்துள்ளது. ஆனால், தங்கள் கூட்டணி பல ஆண்டுகளாக இந்த பிரச்சினைகள்தொடர்பில் கலந்துரையாடிவருகின்ற போதும் தங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வு தாமதமாகின்றது என கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு

☞ 2

## ஆசிரியர் சேவை அத்தியாவசியமாக்கப்படும் அரசுத் தலைவர் விக்கிரமசிங்க எச்சரிக்கை

பிள்ளைகளின் கல்விக்காக காலைவேளையில் ஆசிரியர்கள் பாடசாலைகளில் இருக்க வேண்டியது கட்டாயமானது என்றும், எதிர்வரும் நாட்களில் அவ்வாறு நடக்காமல் போனால் ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க அறிவித்தார்.

☞ 8

## கொழும்பில் வெள்ளத்துக்கான காரணம் குறித்து அறிக்கை கேட்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்து அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் அறிக்கை கோருமாறும், அந்த அறிக்கைகளின் அடிப்படையில் ஆரம்ப அறிக்கையை தயாரித்து இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம்பிரதானியுமான சாகல ரத்நாயக்க கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களுக்குஅறிவுறுத்தல் வழங்கினார்.

அதன் பிரகாரம், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத்

☞ 9

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதிக்கும் அரசமைப்புச் சபைக்கும் இடையிலான மோதல் தீவிரம் பெறுவதற்கு இடையிலேயே அதனை ஒ-ரு முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார் சட்ட மா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம். அரசமைப்புச் சபையின் முடிவை மீறி அவருக்கு ஜனாதிபதி 6 மாதங்கள் பதவி நீடிப்பு அறிவித்தபோதும் தாம் தமது 6-0 வயதுடன் ஓய்வுபெறவுள்ளார் என்று அவர் அறிவித்துள்ளார்.

அவரது சேவைக்காலத்தை 6 மாதங்களுக்கு நீடிக்க ஜனாதிபதி பரிந்துரை செய்தார். அந்த பரிந்துரையை அரசமைப்பு பேரவை இரண்டு தடவைகள் நிராகரித்தது. முதல் தடவை நிராகரித்ததை அடுத்து, அந்த முடிவை மீறி சட்ட மா அதிபருக்கு 6 மாத பதவி நீடிப்புக் கடிதத்தை வழங்கினார் ஜனாதிபதி.

இதையடுத்து புதன்கிழமை சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மீண்டும் அவசரமாகக் கூடிய அரசமைப்புப்

☞ 2

## ஐ.நா. பிரதிநிதியுடன் மனோ நேற்று சந்திப்பு

இலங்கை ஐ.நா. வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தலைமையிலான தூதுக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் நடந்தது. இதன் போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் மற்றும் தமுகூ/ஜமமு கேகாலை மாவட்ட அமைப்பாளர் எம். பரணிதரன் ஆகியோரும் சந்திப்பில் உடனடிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தாவது:

நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை உட்பட, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகலை ஆகிய மாவட்டங்களில் பரந்து விரிந்துள்ள பெருந்தோட்ட பிரதேசங்களில், நவீன அடிமைத்துவஅம்சங்களுக்குமத்தியில், மலையக சமூக குடும்பங்கள்

☞ 2

# 28க்குப் பதில் 7 சதவீதமே கடன் தள்ளுபடி கிடைத்தது

### இது ஓர் நற்செய்தியல்ல என்கிறார் ஹர்ஷ டி சில்வா

சர்வதேச கடன் வழங்குநர்களுடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கமைய 28 சதவீத கடன் தள்ளுபடி எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வெறும் 7 சதவீதத்துக்கு மாத்திரம் இணக்கம் காணப்பட்டுள்ளமை ஒரு நற்செய்தியல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்

☞ 2

## தேர்தல் விடயத்தில் ஆளும் தரப்பு அசரமைப்புக்கு மாறாக செயற்படாது

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

தேர்தலைவிடயத்தில் ஆளும்தரப்புஒருபோதும் அரசமைப்புக்குபுறம்பாக செயற்படாது என்று ஆளும்தரப்பின்பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் ஒத்தி வைக்கப்படுமா என்ற விவாதம் நாட்டில் நிலவி வருகிறது. அத்துடன், பொதுத்தேர்தலாஅல்லது ஜனாதிபதித் தேர்தலா என்பது குறித்தும் கலந்துரையாடப்படுகிறது. ஆளும்தரப்புஎன்ற

☞ 8

## இன்று பணிக்கு திரும்பும்படி ஆசிரியர்களிடம் கோரிக்கை

அனைத்து பாடசாலை மாணவர்களின் நலன்களையும் கருத்திற்கொண்டு நாளை (இன்று) பணிக்கு சமூகமளிக்குமாறு, பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களிடம் பதில் கல்வி அமைச்சரும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமானகலாநிதி பந்துல குணவர்தன வேண்டுகோள்விடுத்தார்.

அரச தகவல் திணைக்களத்தில்நேற்று செய்தியாளர்களிடம் இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

☞ 9

## வட்டியுடன் கந்துவட்டியும் செலுத்தவேண்டிய நிலை

### ஜனாதிபதியின் உரை மீது எதிர்க் கட்சித் தலைவர் காட்டம்

கடன்மறுசீரமைப்பு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதையொட்டிய ஜனாதிபதியின் உரையைக் காட்டமாக விமர்சித்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வட்டியுடன் கந்துவட்டியும்

☞ 8

## நாணய நிதியம் வரவேற்பு

இலங்கை அதற்கு கடன் வழங்கிய முக்கிய நாடுகளுடன் கடன்மறுசீரமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதை சர்வதேசநாணயநிதியம் வரவேற்றுள்ளது.

கடன்மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் இறுதிசெய்யப்பட்டமை ஒருமுக்கியமான

☞ 2

## ஜப்பானும் வரவேற்பு

கடன்மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கைக்கும் இந்தியா ஜப்பான்பிரான்ஸ்தலைமையிலான உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்குழுவிற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை ஜப்பான் வரவேற்றுள்ளது.

☞ 9

## மகிந்த சீனாவிற்கு பயணம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவிற்கு பயணமாகியுள்ளார்.

சீன அரசின் விசேட அழைப்பிற்கிணங்க அவர் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்சவுடன் மேலும் 4 அதிகாரிகள் சீனா சென்றுள்ளதாக சிறீலங்காபொதுஜனபெரமுனவின்பொதுச் செயலாளர் சாகர ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்களின் இந்த 4 நாள் பயணத்தின்போது சீனாவின் முக்கிய பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளதாக குறிப்பிடப்படும் அதேவேளை, சீன ஜனாதிபதி ஷிஜின் பிங்குடனான

☞ 2

## அதானி நிறுவனத்துடன் செய்யப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களில் மோசடி

### அஜித் பெரேரா எம்.பி. குற்றச்சாட்டு

இந்தியாவின்அதானி நிறுவனம் முன்னெடுத்துள்ள மின் உற்பத்தி திட்டங்களில் பெரும் நிதிமோசடி இடம்பெற்றுள்ளதாக ஐக்கியமக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்ஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத்

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பேரவையின் கூட்டம் மாலை 6 மணி முதல் 2 மணித்தியாலங்கள் நீடித்தது. இறுதியில், 60 வயது முழுமையடைந்ததன் பின்னர் சட்டமா அதிபரின் சேவை நீடிப்பை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரம் தமக்கு இல்லை என்று நிராகரித்துவிட்டது.

அரசமைப்புப் பேரவையின் இந்தத் தீர்மானம் உடனடியாக அன்றிரவே ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. இதனால் அரசமைப்புப் பேரவைக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும் இடையிலான பிணக்கு தீவிரமடையும் நிலை ஏற்பட்டது. ஆனால், தான் தனது 60ஆவது வயதிலேயே ஓய்வுபெறப் போகின்றார் என்று அறிவித்ததன் மூலம் இந்தச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் சட்ட மா அதிபர்.

முன்னதாக, 2015ஆம் ஆண்டு அரசமைப்புச் சபையை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்டவர் ரணில் விக்கிரமசிங்கதான். நிறைவேற்று ஜனாதிபதியின் வரம்புமீறிய அதிகாரங்களைச்சமநிலைப்படுத்தும் நோக்கத்தோடு இந்த அரசமைப்புச் சபை ஏற்படுத்தப்பட்டது. இப்போது அதனை மதிக்காமல் அதன் பரிந்துரைகளை மீறி அதனோடு மோதல் போக்கில் செயற்பட்டு வருபவரும் அவரேதான். இது எங்கு போய் முடியுமோ தெரியவில்லை....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 28க்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட உரை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையை செவிமடுத்தோம். அதில் நாட்டுக்கு சிறந்த தாய் யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சி காலத்தில் நாணய நிதியத்தை நாட வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் தற்போது அதனை எதிர்க்கின்றனர் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி எல்லா விடயங்களுக்கும் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை. ஜனாதிபதிக்கு இந்த உரையை எழுதிக்கொடுத்தவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தாலும், அதனை வாசிக்க முன்னாள் ஜனாதிபதி சற்று சிந்தித்திருக்கலாம். சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு நாமே ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்தோம்.

ஐக்கிய மக்கள் சக்தி அசடு போல் தான் இதுவரை செயற்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். நாம் எவ்வாறு செயற்பட்டோம் என்பதை ஜனாதிபதி ஒருமுறை சிந்தித்து பார்த்திருக்க வேண்டும். 2020இல் நாடாளுமன்றத்துக்கு வந்த முதல் நாளே நாணய நிதியத்தை நாட வேண்டும் என்று நாம் கூறினோம். இதனைப் புரிந்து கொள்ளுங்கள். சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டமைக்கெதிராக நாம் எமது வாக்கினைப் பயன்படுத்தவில்லை.

ஜனாதிபதியின் உரையை தயாரித்தவர் அதனை அறிந்திருக்கவில்லைபோலும். நாணயநிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டில் சிலதிருத்தங்களை மேற்கொள்வோம் என்றே நாம் கூறினோம். எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாச தலைமையில் பீட்டர் பீருவருடனானகலந்துரையாடலிலும் எவ்வாறு நாம் இதில் திருத்தங்களை ஏற்படுத்துவோம் என்பதை தெளிவாக தெரிவித்துள்ளோம்.

பிரதான இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களான சீன, ஜப்பன் இந்தியா உட்பட ஏனைய நாடுகளுடன் இணக்கப்பாட்டை எட்டியமை உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. அதன் ஊடாக நன்மைகிடைக்குமானால் இலங்கை என்ற குழந்தையை அங்குமிங்கும் இழுத்து சிதைப்பதற்கு நாம் தயாராக இல்லை. நாம் மக்களுக்கான எதிர்க்கட்சியாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இது எமது இராஜதந்திர உறவுகளினால் கிடைத்த பயனாகும். மாறாக லஸாட் மற்றும் கிளிபோர் சான்ஸ் நிறுவனங்களின் தலையீட்டினால் கிடைத்த ஒன்றல்ல.

தற்போது ஜப்பானுடன் இணக்கப்பாட்டை எட்டியதற்கு கரகோஷமெழுப்பியவர்களே, அன்று ஜப்பானை கன்னங்களில் அறைந்து நாட்டை விட்டு விரட்டினர். இந்தியாவுடன் எமக்கு பெரும் சகோதரத்துவ பிணைப்புள்ளது. ஜப்பான் எமது நீண்ட நாள் நட்பு நாடாகும். நாடுகளோடு நாம் பேணி வந்த நட்புகளாலயே இந்த வெற்றி எமக்கு கிடைத்தது. இவ்வாறு இணக்கப்பாடு எட்டப்பட்ட விடயங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும், அதற்கு ஆதரவு வழங்குமாறும் ஜனாதிபதி கோரியுள்ளனர்.

அதன் உள்ளடக்கம் குறித்து அறிய வேண்டியுள்ளது. எத்தனை வருடங்களுக்கு சலுகைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது? 2028 வரை கடன் தவணைகளை செலுத்த வேண்டிய தேவை இல்லை என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

கடன் தவணைகளை காலம் தாழ்த்தும் போது வட்டி செலுத்த வேண்டுமா? இல்லையா? அதன் பிற்பாடு வட்டி விகிதம் என்ன? இது தொடர்பான விடயங்களை அறிய விரும்புகிறோம். சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்கள் அடங்கலாக சர்வதேச வணிக்கடன் தரப்பினரோடு இதுவரை எந்த நிலையான இணக்கப்பாடுகளையும் எட்டவில்லை.

சர்வதேச வணிக கடன்தாரர்கள் தற்போது முன்வைத்துள்ள விடயங்களுடன் இலங்கை இணக்கப்பாட்டை எட்டுமாக இருந்தால் இதற்கு நாம் எமது எதிர்ப்பை தெரிவிக்கிறோம். காரணம் அவர்கள் முன்வைத்துள்ள விடயங்கள் நாட்டுக்கு பாதகமானவையாகும். கடன் செலுத்தும் இயலுமையையே பார்க்கின்றனர்.

நிதி ஸ்திரதன்மையை மீட்டெடுக்கும் நிலை இங்கு அவதானிக்கப்படுகிறது. இதனால் புதிய தரப்படுத்தல் நிலையை எட்டலாம். சர்வதேச நாணய நிதியம் புதிதாக முன்வைத்துள்ள இணக்கப்பாட்டறிக்கையில் கடன் மீள் செலுத்தாமை சலுகை வீதம் என்ன என்பது குறிப்பிடப்படவில்லை.

இந்த இணக்கப்பாட்டுக்கமைய கடன் தள்ளுபடி 50 வீதம் என ஆரம்பத்தில் அரசாங்கம் தெரிவித்தது. பின்னர் 30 சதவீதம் எனத் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் 28 சதவீதமென எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறிருந்தாலும் இது 2028ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறைக்கு வரும். சர்வதேச நாணய நிதியம் புதிதாக முன்வைத்துள்ள இணக்கப்பாட்டறிக்கையின் பிரகாரம் அவதானிக்குமிடத்து கடன் தள்ளுபடி 28 சதவீதத்திலிருந்து - 7 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

இந்தளவு குறைந்த மட்டத்துக்கு உடன்பாட்டை எட்டியமை நாட்டிக்கு நற்செய்தியல்ல. மக்களுக்கு பாதமே. இதற்கு அரசாங்கம் முன்வைத்துள்ள பரிசீலனை பரிந்துரைகளின் பிரகாரம் முன்னோக்கி செல்லும் தீர்மானத்துக்கு வந்தால் இது குறித்து கலந்துரையாடலாம் என்றார்.

## விடத்தல்தீவு இயற்கை சரணாலயம் தொடர்பான

# அமைச்சர் பவித்திராவின் அறிவிப்புக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை

மன்னார் விடத்தல்தீவு இயற்கை சரணாலயத்தின் ஒரு பகுதியை விடுவித்து, வனஜீவராசிகள் அமைச்சர் சட்டத்தரணி பவித்ரா வன்னியாராச்சி வெளியிட்ட வர்த்தமானி நடைமுறைப்படுத்தப்படுவதை தடுத்து, உயர் நீதிமன்றம் நேற்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மன்னார் - விடத்தல்தீவு இயற்கை சரணாலயத்தின் ஒருபகுதியைவிடுவித்துவெளியிடப்பட்ட வர்த்தமானியை ஆட்சேபித்து பல சுற்றுச்சூழல் அமைப்புகள் தாக்கல் செய்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் இன்று உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த மனுக்கள் உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் மனுக்களை விசாரணைக்குஎடுத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை நிறைவு பெறும் வரை வர்த்தமானி நடைமுறைப்படுத்தப்படுவதை தடுத்து நீதியரசர்கள் குழாம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

விடத்தல் தீவு 'இயற்கை சரணாலயம்' என்று குறிப்பிடப்பட்டிருந்த பகுதி நிறைவுக்கு வருவதாக கடந்த மாதம் 6 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் சட்டத்தரணி பவித்ராதேவி வன்னியாராச்சிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உப ஆவணத்தில், விடத்தல் தீவு 'இயற்கை சரணாலயம்' என்று குறிப்பிடப்பட்டிருந்த பகுதி நிறைவுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட விடத்தல்தீவின் 400 ஏக்கரை இயற்கை சரணாலயத்தில் இருந்து விடுவிப்பதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

விடத்தல்தீவு கண்டல் தாவரங்களை அதிகளவில் கொண்ட பகுதியாக காணப்படுவதுடன், பறவைகள் சரணாலயமாகவும் அமைந்துள்ளது. இறால் பண்ணைகள் கடல் அட்டை பண்ணைகள் போன்ற நீர் வேளாண்மையை முன்னெடுப்பதற்காக இயற்கை சரணாலயத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 11 ஆம் திகதி தெரிவித்திருந்தார். மன்னார் விடத்தல் தீவு இயற்கை சரணலயத்தின் ஒரு பகுதியை விடுவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு சூழலியலாளர்கள் மற்றும் பொது அமைப்புகள் தொடர்ச்சியாக கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

## அதானி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவி1த்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் பூநகரியில் காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்தியாவின் அதானி கிறீன்ஸ் எனேர்ஜி நிறுவனத்திற்கு ஆளும்தரப்பு அனுமதிவழங்கியுள்ளமை குறித்து பல்வேறு கேள்விகள் உள்ளன.

இலங்கையின் வலுசக்தி துறையின் காற்று வலுசக்தித்துறையை ஜனாதிபதியும் அமைச்சர் காஞ்சனவிஜயசேகரவும் இந்திய நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதில் பெரும் அளவிலான நிதிமோசடி இடம்பெறுகின்றது.

இந்தியாவின் அதானி கிறீன்ஸ் எனர்ஜி நிறுவனம் மூலம் மன்னார் மற்றும் பூநகரியில் காற்றாலை காற்றாலை மின்நிலையங்களை உருவாக்க முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினை ஒரு கிலோவோட்டிற்கு அதிகூடிய விலை அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு ஆளும்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த திட்டத்தினை கேள்விப்பத்திரத்தை கோராமல் இந்திய நிறுவனத்திற்கு வழங்கியுள்ளனர் என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இதன் காரணமாக 20 வருடங்களில் இலங்கை பல மில்லியன் டொலர்களை இழக்கவேண்டிய நிலையேற்படும்

விண்ட்போர்ஸ் என்ற நிறுவனம் காற்றுமின்சக்தி நிலையத்தை உருவாக்க முன்வந்தது அந்த நிலையம் அதானி நிறுவனத்தை விட அதிக விலையை வழங்க முன்வந்தது.

ஆனால், கேள்விப்பத்திர முறைகள்மூலம் இந்தநிறுவனத்திற்கு 50 மெகாவோட் காற்றுமின்சக்தி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு மட்டுமு இலங்கை மின்சார சபை அனுமதிவழங்கியுள்ளது என்றார்.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைல்கல் என தெரிவித்துள்ள சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீற்றர் புரூவர் இலங்கை அதன் கடன் மறுசீரமைப்பை பூர்த்திசெய்ததன் மூலம் இலங்கை கடன் நிலைத் தன்மையை நோக்கி ஒருபடி முன்னேறியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் உள்ள அனைவரும் துருப்பிடித்த தலைவர்களே

## தேசிய மக்கள் சக்தி தலைவர் சாடல்

ரணில் விக்கிரமசிங்க மிகவும் வயதானவர். அவர் உட்பட நாட்டில் உள்ளவர்கள் துருப்பிடித்த தலைவர்களாகவே உள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட மாஜுநடு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மாற்றம் ஒன்றுக்காக போராட்டங்கள் இடம்பெறுகின்றன. மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காக தீர்மானம் மிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த மாற்றத்தினை யாரால் ஏற்படுத்த முடியும். ரணில் விக்கிரமசிங்கவினால் முடியுமா. ரணில் விக்கிரமசிங்க நாற்பது வருடங்காக தலைவராக உள்ளார். அவர் மாற்றங்களுடன் கூடிய தலைவராக இருந்திருந்தால் அது நடைபெற்றிருக்க வேண்டும்.

மொட்டுக்கட்சியின் தலைவர் மஹிந்த ஜனாதிபதி தேர்தல் குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை, ரணிலுக்கு ஆதரவளிக்கும் முடிவினை எடுக்கிவில்லை என்கிறார்.

மஹிந்தானந்த, லொஹான் ரத்வத்த, பிரசன்ன ரணதுங்க, நிமல் லன்சா உள்ளிட்டவர்கள் ரணிலை ஆதரிப்பதாக கூறுகின்றார்கள். அவர்கள் மாற்றதிற்காக அவ்வாறு ஆதரவினை வெளியிடுவதாக கூறுகின்றார்கள். அதேபோன்று மட்டக்களப்பில் பிள்ளையான் ரணிலை மாற்றத்துக்காக ஆதரிப்பதற்கு தீர்மானித்துள்ளாராம்.

மாற்றத்தினை ஏற்படுத்துவதாக இருந்தால் நாட்டில் மாற்றம் மிக்க தலைமைத்துவம் அவசியமாகின்றது. மக்கள் மாற்றத்தினை எதிர்பார்கின்றார்கள். ஆனால் அந்த மாற்றத்தினை ரணிலால் வழங்க முடியாது. அவ்வாறாயின் சஜித்தால் முடியுமா என்று கேள்வி எழுப்புகின்றீர்கள்.

நான் அவர்பற்றி கருத்துக்களை வெளியிட்டு நேரத்தினை வீணடிக்க விரும்பவில்லை. மாற்றத்தினை வழங்குவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். தேசிய மக்கள் சக்தி அதற்கான தலைமைத்தவத்தினை வழங்கும் என்றார்.

எதிர்காலத்தில் வெளி தனியார் கடன்கொடுப்பனவாளர்களுடன் உடன்பாடுகளை எட்டுவதில் விரைவான முன்னேற்றம் ஏற்படும் எனவும் எதிபார்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிராம....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கிராம உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் முதல் மூன்று நாட்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அவர்கள் வார இறுதி நாட்கள் மற்றும் விசேட அரச விடுமுறை நாட்களில் வேலை செய்ய போவதில்லை என்றும் அறிவித்துள்ளனர். தங்களின் கோரிக்கைகளுக்கு ஆளும்தரப்புப் பதில் அளிக்காவிட்டால், மாவட்ட அளவில் போராட்டம் தொடரும் என கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## மகிந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு குறித்து இன்னமும் உறுதிப்படுத்தப்பட்டவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஐ.நா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்கின்றன. இம்மக்களுக்கு பெருந்தோட்ட நிலங்களில், வதி விட காணி உரிமை, வாழ்வாதார காணி உரிமை உள்ளிட்ட உரிமைகளைப் பெற்றுதந்து அவர்களை இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக்கும் கொள்கையைத் தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுக்கின்றது.

அடுத்துவரும் ஆட்சிமாற்றத்தை அடுத்து, இது ஒட்டு மொத்த பெருந்தோட்ட துறையிலும் முறை மாற்றமாக பரிணமிக்க வேண்டும். அதற்கான முன்தயாரிப்பு பணிகளில் நாம் இன்று ஈடுபட்டுள்ளோம். இந்த விவகாரங்கள் தொடர்பான உள்நாட்டு அரசியல் சட்டவாக்க

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மக்களையும், அவர்களுக்கான அபிவிருத்திகளையும் பின்கொண்டு செல்லும் செயலே பொது வேட்பாளர்

## திலீபன் எம்.பி. காட்டம்



பொது வேட்பாளரை நிறுத்துவது மக்களையும், அவர்களுக்கான அபிவிருத்திகளையும் பின்னுக்கு கொண்டு கொண்டு செல்லும் ஒரு செயற்பாடு எனவன்னிமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் பேரம் பேசும் சக்தியாக மாற வேண்டும் எனில் யார் ஜனாதியாக வரப் போகிறாரோ அல்லது அந்தப் போட்டியில் யார் முன்னிலையில் உள்ளாரோ அவருடன் தான் பேரம் பேச முடியும். சம்பந்தமில்லாதவருக்கு ஆதரவு அளிப்பது எமக்கு இழப்பு தான். அது ஆரோக்கியமானது அல்ல.

ரணில் விக்கிரமசிங்க, சஜித், அனுர ஆகியோர் தான் இந்த போட்டியில் உள்ளனர். அவர்களுடன் பேசி அல்லது அதில் வெல்லக் கூடியவருடன் பேசித் தான் நாம் எமக்கானவற்றைப் பெற வேண்டும். அதை விடுத்து பொது வேட்பாளர் என்பது தேவையற்ற விடயம். பொது வேட்பாளர் என ஒருவரை நிறுத்துவது எமது மக்களையும், அவர்களது அபிவிருத்தியையும் இன்னும் பின்னுக்கு கொண்டும் செல்லும் செயற்பாடு எனத் தெரிவித்தார்.(05 - 100)

# மூதூர் இருதய புர மக்கள் போராட்ட களத்துக்கு இம்ரான் எம்.பி. வருகை



(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர் இருதயபுரம் பகுதியில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலைக்கு எதிராக போராடிவரும் மக்களை புதன்கிழமை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடினார்.

குறித்த கவனவீர்ப்பில் மூதூர் பொலிஸாரால் கைதான 15 நபர்களும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறும்மூதூர் நீதிமன்றநீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட கிளை தலைவர் சண்முகம் குகதாசன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(05)





# சிறீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடும் விருது வழங்கலும்

(எம் சியாஜ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27 ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 30.06.2024 காலை 09.30 மணிக்கு கொழும்பு 10 தபால் தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் பிரதம அதிதியாக இலங்கையின் ஐக்கிய நாடுகள் சபை வதிவிட இணைப்பாளர் மார்க்ஸ் அன்றோ ரன்சே கௌரவ அதிதியாக இலங்கை ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் கலாநிதி அலி றீசா டெல்கோஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிரதம பேச்சாளர்களாக பிரபல எழுத்தாளர் எம்.எல்.ஏ மன்சூர். இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளர் முன்னாள் சட்ட சபை உறுப்பினருமான கே.ஏ.எம்.முஹமட் அபுபக்கர், ஆகியோர் கலந்து கொள்வார்கள். இதன்போது சன்டே ஜலன்ட் பத்திரிகையின் ஆசிரியர் மெனிக் டி சில்வா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

இதேவேளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட ஒலிபரப்பாளர் திருமதி புர்ஹான் பீ இப்திக்கார், வசந்தம் தொலைக்காட்சியின் சிரேஷ்ட செய்தி முகாமையாளர் எம்.சித்தீக் ஹனிபா, பிறை எப்.எம்.வானொளி தலைமையதிகாரி பசீர் அப்துல் கையும், மூத்த ஊடகவியலாளர்களான சுகைப் எம் காசீம், அமீர் ஹுசைன், தென் பிராந்திய ஊடகவியலாளர் எம்.எம்.எம் பசீர், வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீகஜன், தினக்குரல் ஆசிரியர் ஆர்.பி ஹரன், உதயம் செய்தி ஆசிரியர் சிறராஜ் எம். ஷாஜகான ஆகியோரும் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந் நிகழ்வில் போரத்தின் உதவித் தலைவர் ஊடகவியலாளர் றிப்தி அலி தகவல் அறியும் சட்டம் தொடர்பான ஊக்குவிப்புக்காக விசேடமாக கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# புத்தளத்தில் நடைபெற்ற கால்பந்தாட்ட போட்டி நான்காவது முறையும் சீகோன் ரெட் சம்பியன்!



(எம்.சியாஜ்)

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அமைப்பான ‘சோன்’ அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘க்லேஷ் ஒப் சஹீரியன்ஸ் சீசன் 5’ கால்பந்தாட்ட போட்டி தொடர் அண்மையில் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

புத்தளம் வை.எம்.ட்ரவல்ஸ் நிறுவனம் இத்தொடருக்கு பூரண அனுசரணையை வழங்கி இருந்தது.

மொத்தமாக 40 பழைய மாணவர் சங்க அணிகள் பங்கேற்ற இத்தொடரில் இறுதிப்போட்டியில் சீகோன் ரெட் அணியும், சஹீரியன்ஸ் 14 அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இறுதிப்போட்டியில் சீகோன் அணி (2015 சா/த, 2018 உ/த) 05 : 00 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று 04 ஆவது முறையாகவும் சாம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது.

போட்டி தொடரில் சீகோன் ரெட் அணியின் வீரரும், புத்தளம் லிவர்பூல் அணியின் நட்சத்திர வீரருமான எம்.எம். முசாக்கிர் அதிக கோல்களை செலுத்தியவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

சிறந்த கோல் காப்பாளருக்கான விருது பல்ஸ்ட் அணி வீரர் ஜப்ரிஸுக்கு வழங்கப்பட்டது.

சாம்பியனான சீகோ அணிக்கு 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும், இரண்டாம் இடம் பெற்ற சஹீரியன்ஸ் 14 அணிக்கு 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வழங்கப்பட்டதோடு வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கல்விச் சேவையின் அத்தியாவசியம்

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் நடத்திய இரண்டு நாள் சுகவீன விடுப்புப் போராட்டத்தினால் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலை தோன்றியிருப்பதாகப்படுகிறது.

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைக் கைவிட்டு அதிபர்களும் ஆசிரியர்களும் உடனடியாக வேலைக்குத் திரும்பாவிட்டால் அதிபர், ஆசிரியர் சேவைகளை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கவேண்டியிருக்கும் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலையில் எச்சரித்திருந்தார். கண்டிக்குச் சென்றிருந்த அவர், அங்கு அஸ்கிரிய மல்வத்த பீட மகாநாயக்கர்களைச் சந்தித்துப் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

"குழந்தைகளின் கல்விக்காக, ஆசிரியர்கள் கண்டிப்பாக காலை நேரத்தில் பாடசாலைகளில் இருக்கவேண்டும். எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களின் கல்வியை இழந்தால் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சேவையை அத்தியாவசியமானதாக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தர்க்க ரீதியில் அவரது வாதம் ஏற்புடையதே. மாணவர்களின் கல்வி என்பது அவர்களின் எதிர்காலத்திற்கானது. யாருடைய எதிர்காலத்தையும் பாதிக்கின்ற வகையில் நடந்துகொள்வதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. ஏற்கனவே கொரோனா போன்ற பெருந்தொற்றுக் காலத்தால் கல்வியை இழந்த மாணவர்கள் அதிலிருந்து மீள்வதற்குப் பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேலும் மோசமாக்கும் வகையில் அதிபர், ஆசிரியர்கள் தொடர்ந்து பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளைப் புறக்கணிப்பது ஏற்புடையது அல்ல.

மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாத வண்ணம் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் திட்டமிடவேண்டியது அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் கடமை. ஆளும் தரப்பினருடன் பேச்சு மூலம் தீர்வைக் காண முடியாத நிலையில், கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலான போராட்ட வடிவங்கள் மூலம் அழுத்தம் கொடுப்பதற்கு அவர்கள் சிந்திக்க வேண்டும். ஆசிரியர் பணி என்பது வெறும் தொழில் அல்ல, எடுத்ததற்கெல்லாம் உரிமைகோரிப் போராட்டம் நடத்துவதற்கு. அது ஒரு சேவை. அர்ப்பணிப்புமிக்க சேவை. சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சேவை. எனவே அது பாதிக்கப்படும் வகையிலான எந்தவொரு நடவடிக்கைகளும் கட்டுமீறிப் போவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேநேரம், கல்வி எப்படி மாணவர்களுக்கு அத்தியாவசியமானது என்பதை அரசுத் தலைவர் உணர்ந்திருக்கிறாரோ, அதே அளவுக்கு அதிபர், ஆசிரியர்கள் தமது சேவைகளைப் புறக்கணிக்காத நிலையில் அவர்களை வைத்திருப்பது ஆட்சியாளர்களின் தலையாய கடமை. கற்பித்தலை அத்தியாவசிய சேவையாக்குவதைவிட முக்கியமானது பாடசாலைகளுக்குப் போதிய வசதிகளை வழங்கி கற்றல்சூழலை ஏற்படுத்துவது. அரச பாடசாலைகளில் பெரும்பாலானவை பெரும் பற்றாக்குறைகளுடனும் வசதிக்குறைவுகளுடனுமே இயங்குகின்றன. போதாததற்கு பல பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாத நிர்வாகச் சீர்கேடும் நிலவுகின்றது. கல்வி அத்தியாவசிய சேவையாக இருப்பதற்கு அரசு இந்தக் குறைகளை எல்லாம் உனடியாகச் சரிசெய்யவேண்டியது அவசியம்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனையே ஆளும் தரப்புக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். அதிபர், ஆசிரியர் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவிப்பதற்கு முன்னர் பாடசாலைகளின் அத்தியாவசிய தேவைகளை ஆளும் தரப்பு முதலில் பூர்த்தி செய்ய வேண்டும் என்றார் அவர். பாடசாலை மாணவர்களுக்கு அத்தியாவசிய தேவைகள் எதுவும் வழங்கப்படவில்லை, குழந்தைகளின் கல்விச் சுமை பெற்றோர்கள் மீது விழுந்துள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார் அவர்.

பாடசாலை மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யாமல், தேவையான வசதிகளை செய்து கொடுக்காமல், பாடசாலை மாணவர்களுக்கு கற்பிக்கவில்லை என ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மீது குற்றம் சுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது ஸ்டாலினின் வாதமாக இருக்கிறது. அதில் உண்மையும் இருக்கின்றது. அரச பாடசாலைகளில் குறிப்பாக கிராமங்களில் இருக்கும் பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகின்றது, மாணவர்கள் நகரப்புறப் பாடசாலைகளை நோக்கிப் படையெடுத்து வருகின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் அரசு கிராமப்புறப் பாடசாலைகளைக் கைவிட்டுள்ளமைதான்.

எனவே அதிபர், ஆசிரியர் சேவையை அத்தியாவசிய சேவையாக்குவதற்கு முன்னர் கல்வியை அத்தியாவசிய சேவையாக்கி அனைத்துப் பாடசாலைகளுக்கும் போதிள பௌதீக மற்றும் ஆளுணி வசதிகளை வழங்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தோடு அதிபர், ஆசிரியர்கள் போராடி தமக்கான வசதி வாய்ப்புக்களைக் கேட்பதற்குப் பதிலாக நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சிற்பிகளான அவர்களை சமூகத்தின் மிக உயர்ந்த இடத்தில் வைத்து தேவையான வசதிகளை அரசும் வழங்கவேண்டும். இவற்றைத் தாண்டியும் முரண்பாடுகள் ஏற்படும்போது அதிபர், ஆசிரியர்கள் தமது பொறுப்புணர்ந்து மாணவர் கல்வியைப் பாதிக்காத போராட்ட வடிவங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

# இரட்டை வேடம்

**என் சத்திய மூர்த்தி**

அண்மையில் இலங்கை கடற்பரப்பினுள் மீன் பிடிப்பதற்காக அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களை கைது செய்யும் போது நடந்தேறிய மோதலில், கடற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு கடற்படை படகும் சேதமடைந்தது என்றும் கூறப்படுகிறது.

இந்த மோதல் ஏன் நடந்தது, எவ்வாறு நடந்தது, என்பதெல்லாம் அரசு மற்றும் அரசியல் சார்ந்த விடயங்கள். ஆனால், அத்துமீறி மீன் பிடிக்க வந்த இந்திய மீனவர்களை கைது செய்யும்போது கடற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார் என்ற செய்தி, ஏனோ தமிழர் சமூக-அரசியல் பரப்பில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அது குறித்த பத்திரிகை செய்திகள்கூட அந்த மோதலைப் பெரிதுபடுத்தவில்லை.



இது ஒரு புதிய செய்தியை கூறுகிறது எனலாம். இறந்தவர் சிங்களப் படையைச் சேர்ந்தவராக இருந்தால், அதற்கான காரணம் தமிழ் மீனவர்களின் வாழ்வுரிமை குறித்ததாக இருந்தாலும், அவருக்காக எந்தவொரு தமிழனும் ஒரு சொட்டு கண்ணீர் விடப்போவதில்லை. இது இனப்போரின் தொடர் தாக்கத்தின் விளைவு எனலாம். இந்த புதிரை தென்னிலங்கை ஏற்றுக்கொள்ள போவதில்லை. சர்வதேசம் புரிந்துகொள்ள போவதில்லை.

அதேசமயம், இந்திய மீனவர்களுக்கு எதிராக மீண்டும் ஒரு முறை, யாழ்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தின் முன்னால், இங்குள்ள மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அது, இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கரின் கொழும்புப் பயணத்திற்கு முந்தைய நாள் அரங்கேறியது என்பது குறிப்பிடதக்கது. ஆனால், அடுத்த தினமே, ஜெய்சங்கருடன் இனப்பிரச்சினை குறித்து விவாதித்த தமிழ் தலைவர்களில் யாராவது மீனவர் பிரச்சினையை குறிப்பிட்டு ஒரு வார்த்தையாவது பேசினார்களா, என்று தெரியவில்லை. அவ்வாறு அவர்கள் பேசியதாகவும் செய்திகள் இல்லை.

### உறுதிமொழி

இரு நாட்டு மீனவர் பிரச்சினை குறித்து, பேச்சு மூலம் முடிவு காண, இலங்கை தமிழ் மீனவர்கள் என்றைக்குமே எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மாறாக, எப்போதெல்லாம் வாய்ப்பு கிடைத்ததோ, அப்போதெல்லாம், மீனவர் பிரச்சினையை பேச்சு மூலம் சுமுகமாக தீர்த்துக்கொள்ளலாம் என்றே அவர்கள் திரும்பத்திரும்ப கூறி வந்துள்ளனர்.

இலங்கை தமிழ் மீனவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் எதிர்பார்ப்பது எல்லாம், இந்தியாவின் தமிழ் நாடு மற்றும் காரைக்கால் பகுதி மீனவர்கள், இழுவைமடி (ட்ரோலர்) மூலம் மீன் பிடித்து, தங்களது வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் சிதைக்கக்கூடாது என்பதுதான். இதனையே அவர்கள் இரு நாட்டு மீனவர்களிடையே நடந்தேறிய ஒன்றிரண்டு சுற்று பேச்சுக்களிலும் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

ஆனால், கடந்த சில வருடங்களில் இரு தரப்பு மீனவர் பேச்சு நடைபெறாத காரணத்தால், இதில் ஒரு தொய்வு விழுந்துள்ளது. அதேசமயம், இழுவைமடி மீன்பிடிப்பை நிறுத்துவது குறித்து இந்திய மீனவர்கள் எந்தவொரு உறுதிமொழியும் தருவதில்லை என்பதும் உண்மை.

அந்த வகையில், இலங்கை தமிழ் மீனவர்கள், தங்களது இந்திய உடன்பிறப்புகள், சட்டப்படி தடுக்கப்பட்டுள்ள, தொழில் ரீதியாக தவிர்க்கப்பட வேண்டிய மீன்பிடி முறைகளை நிறுத்திக் கொண்டால், தங்களது கடல்பரப்பில் அவர்கள் மீன் பிடிப்பதில் தங்களுக்கு எதிர்ப்பு இல்லை என்பதையும் தொடர்ந்து கூறி வந்திருக்கிறார்கள்.

கடல் பிராந்தியத்தில், அவ்வப்போது, அவர்களும் சட்டத்தை தங்களது கைகளில் எடுத்திருக்கிறார்கள். ஆனால் அது எதுவுமே அல்ல தற்போதைய பிரச்சினை.

இதில் கொடுமை என்னவென்றால், தமிழ் மீனவர்களின் பெயரைச் சொல்லி இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள் விளையாடும் விளையாட்டுகள்தான். இது போதாது என்று, தங்களுடைய அரசியலை கடல் பகுதிகளிலும் கரைத்து விட்டுள்ளனர். இதில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், தமிழ் அரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் முன்னணியில் எதிரெதிராய் நிற்பவர்கள்.

பல ஆண்டு காலங்களாகவே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மீனவர்களை முன்னிறுத்தி அரசியல் செய்து வருகிறார். ஆனால், கடந்த சில வருடங்களில் மட்டுமே சுமந்திரன், தனது மூக்கை நுழைத்து வந்துள்ளார். இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் வெளிநாட்டு மீனவர்களுக்கான தண்டனையை அதிகமாக்கியதில் சுமந்திரனுக்கு முக்கிய பங்கு உண்டு.

இதனால் பாதிக்கப்படுவது இந்தியாவை சார்ந்த, அதிலும் குறிப்பாக, தமிழ் நாடு மீனவர்களே. ஆனால், ஒவ்வொரு முறையும் இந்திய அரச தலைமைகளுடன் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், இனப்பிரச்சினை குறித்து ஆணித்தரமாக பேசுவதும் அவர்தான். இந்த முறையும், ஜெயசங்கர் பயணத்தின்போதும் இதுவே நடந்தது.

### கண்டும் காணாமல்...

இது இவ்வாறு என்றால், இலங்கை அரச தரப்பில் இருந்து, இரு நாட்டு உறவுகள் குறித்தெல்லாம் கவலைப்படாமல், மீனவர் பிரச்சினை என்னவோ, தன்னிச்சையகச் செயல்படுவதாகவே இலங்கை கடற்படை செயல்பட்டுவருகிறது. இந்திய மீனவர்களை நடுகடலில் துரத்துவதும், கைது செய்வதும், அவர்களுடைய விலை உயர்ந்த படகுகளை, கைப்பற்றி, கடற்கரை ஓரத்தில், வெய்யிலுக்கும் மழைக்கும் பலி ஆக்குவதும் கடந்த சில ஆண்டுகளாக அரங்கேறி வருகிறது.

இதற்கு இடைப்பட்ட காலத்தில், இவ்வாறு கடற்கரை பகுதியில் விடப்பட்டிருந்த இரண்டு-மூன்று படகுகள், கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டன என்று கடற்படையே நீதிமன்றில் தெருவித்துள்ளது. இது நம்பும்படியாகவா இருக்கிறது? ஆனால், இந்த பத்திரிகை செய்தி வந்த பின்னரும், இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளும், குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டும் காணாமலே இருக்கிறார்கள்.

காணாமல் போனது என்னவோ, இந்தியாவில் இருந்து அத்துமீறி நுழைந்த படகுகளாக இருக்கலாம். ஆனால், கடற்படையின் காவலில் இருந்த அந்தப் படகுகள் காணாமல் போனது, செய்தியா, இல்லையா? அவ்வாறு அது செய்தி என்றால், அதனை நாடாளுமன்றதின் மூலம் அரசின் கவனத்திற்கு எடுத்து செல்வது அவசியமா, இல்லையா?

அந்த விதத்தில், மற்ற அனைத்து பிரச்சினைகளிலும், இன வித்தியாசங்களை அடிப்படையாக வைத்து, அரசு மற்றும் முப்படையினரையும் தொடாந்து குறை கூறி வரும் தமிழ் அரசியல்வாதிகள், மீனவர் பிரச்சினையில் மட்டும் இரட்டை குழல் துப்பாக்கி போல், கடற்படையினருக்கு ஒத்து ஊதுகிறார்கள். உள் நாட்டில் தொடர்ந்து இரட்டை வேடம் போடுகிறார்கள்.

இதில் கொடுமை என்னவென்றால், தமிழ் அரசியல்வாதிகள் தவறாமல் பாடம் படிக்கும், இந்தியாவுடனான தொப்புள் கொடி உறவு முறை, இதில் மட்டும் தொடர்ந்து அடிபட்டு போகிறது. அந்த இடத்தில், இலங்கை தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் என்ற அடிப்படையில், தமிழ் அரசியல்வாதிகளின் கருத்தும் செயல்பாடும், தென்னிலங்கை அரசியல் மற்றும் அரச தரப்புகளுடன் ஒத்து போகிறது தானே!

# அ’புரத்தில் மின்சாரம் தாக்கி சிறுவன் பரிதாபமாக இறப்பு

அநுராதபுரம், கல்கிரியாகம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி சிறுவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

பசிந்து காஞ்சன பண்டார என்ற 17 வயதுடைய சிறுவனொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிரியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# போலி நாணயத்தாள்களுடன் அ’புரத்தில்: சிறுவன் கைது

அநுராதபுரம் பிரதேசத்தில் தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தம்புத்தேகம பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் போலி நாணயத்தாள்களுடன் சிறுவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம், நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 500 ரூபா போலி நாணயத்தாள்கள் ஆறு கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேக நபரின் வீட்டிலிருந்து போலி நாணயத்தாள்கள் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சம்மாந்துறை மக்களுக்குக் காணிகள் ஆவணம் வழங்கும் நடமாடும் சேவை









(சர்ஜுன் லாபீர்)

ஜனாதிபதியின் பணிப்புரையில் ‘உரித்து தேசிய வேலைத்திட்டத்தின்’ கீழ் பொதுமக்களுக்கான நிபந்தனையற்ற பூரண அளிப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மக்களை தெளிவூட்டல் மற்றும் ஆவணங்களை பொறுப்பேற்றல் தொடர்பான நடமாடும் சேவை புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனிபா தலைமையில் உரித்து காணி ஆவணம் வழங்கும் நடமாடும்சேவைபிரதேசசெயலகத்தில்நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவைக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம கலந்துகொண்டு நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலக கணக்காளர் ஐ.எம் பாரீஸ், உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன் உட்பட காணி உத்தியோகத்தர்கள், காணிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கிராம சேவகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இன்றைய நாளில் 12 கிராம சேவகர் பிரிவுகளுக்கு இவ் நடமாடும் சேவை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 200/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# சமய சின்னங்கள்

விபூதியும், உருத்திராக்கமும் முக்கியமான சைவசமய சின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி தீமைகளில் இருந்து நம்மைப் பாதுகாத்து இறைவனையும் அவனது பெருங்கருணையினையும் நினைவூட்டும் சாதனங்களாகும். இவற்றை நீராடிய பின்னும் பிரதான பூசை வழபாடுகளின் போது நாம் அணிதல் வேண்டும்.

விபூதியை சிவபெருமானை முழுமுதற்கடவுளாக கொண்ட நாம் ஒவ்வொருவரும் அணிவது சைவசமய வழக்கங்களில் இன்றிமையாத ஒன்றாகும். விபூதிக்கு திருநீறு, பசிதம், பசுமம், இரட்சை, ஷஜுரம் என்ற பெயர்களும் உண்டு.

தன்னைத் தரித்தவருக்கு மேலான செல்வத்தைக் கொடுப்பதினால்விபூதிஎனவும்ஒளியைக்கொடுப்பதினால் பசிதம் எனவும் பாவங்களை எரித்து நீறாக்குவதனால் பசுமம் எனவும் தன்னைத் தரித்த ஆன்மாக்களை இரட்சித்துக் காப்பதினால் இரட்சை எனவும் உயிர்களது மலத்தை நீக்குவதனால் ஷஜுரம் எனவும் பெயர் பெறுகின்றது.

குற்றமற்ற பசுவின் சாணத்தை நெருப்பினாலே சுடுவதனால் உண்டாகும் நீறே தூய திருநீறாகும். திருநீறு வெண்மை நிறமானது வெள்ளை நிறத் திருநீறு அணியத்தக்கதாகும். ஏனைய நிறத் திருநீறு அணியத்தகாதது.வெள்ளைநிறத்திருநீறைஅணிவதனால் நமது அகமும் , புறமும் தூய்மை அடைகின்றது.

இங்கே நீறாக எடுத்துக் கொள்ளும் சாணம் ஆன்மாவையும், சாணத்தில் உள்ள அழுக்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும் நெருப்பு திருவருளையும் எரிதல் திருவருள் புரிதலையும் எரிந்த பின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் எனப் பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

திருநீற்றை இருவகையாக தரிக்கலாம். ஒன்று உத்தூளாமை அதாவது திருநீற்றைப் பரவிப் பூசுதலை இப்பெயர்கொண்டுஅழைப்பர்மற்றையவகைதிரிபுண்டரம் எனப்படும். அதாவது திருநீற்றை நீரிற் குழைத்து மூன்று குறியாத் தரிப்பதனையே திரிபுண்டரம் என்பர். சமய தீட்சை பெற்றோர் மாத்திரமே இவ்வாறு தரிக்கத் தகுதியுடையவர்கள இவ்வாறு தரிக்கும் போது குறிகள் வளையாதும்இடையறாதும்ஒன்றையொன்றும்தீண்டாதும் அகலாதும் ஒவ்வோர் அங்குல இடைவெளியிலிருந்தும் வேண்டும்திரிபுண்டரமாக அணிவதற்குரிய உறுப்புக்கள் உச்சி, வெற்றி, மார்பு, கொப்புழ், முழந்தாள்கள் இரண்டு. முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு , விலாப்புறங்கள் ,முதுகு , கழுத்து எனும் பதினாறுமாம்

திருநீறு அணியம் போது வடக்கு அல்லது கிழக்கு முகமாக இருந்து கொண்டு சிவ சிவ என்றும் சொல்லிக் கொண்டு பூச வேண்டும். திருநீறை தரிசிக்க வேண்டிய காலங்கள் காலை, மாலை,உச்சி சூரிய உதயம் சூரிய அஸ்தமனம் , நித்திரைக்கு முன்னும், பின்னம் , உணவு உண்ணும் முன் நீராடிய பின்பும் ஆகும்.

திருநீற்றைப் பற்றி சம்பந்தர் மிக அழகாக கூறியிருக்கிறார். அதாவது,

'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே'

ஒருவன் திருநீறு அணியும் பொழுது அத் திருநீறு படிகின்ற இடமெல்லாம் சிவலிங்கமாகின்றது எனச் சைவ நூல்கள் கூறுகின்றன. நமது முழுமுதற் கடவுள் சிவபெருமானைக் கண்ட அருளாளர்கள் அவரை ' பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு, ' காடுடைய சுடலைப் பொடி பூசி' என்றும் அவர் திருநீற்றினை அணிந்திருக்கின்றார். என்று கூறினார்கள்.

திருநீற்றிற்கு அடுத்தபடியாக எமது சின்னங்களில் முக்கியமானது உருத்திராக்கம் ஆகும். இது பல வகைகளில், பல வடிவில் உண்டு. இவை உருத்திராக்க மரங்களில் இருந்து பெறப்படும். உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் என பொருள்படும் ஒருமுகம் தொடக்கம் பதினாறு வரையான முகங்கள் கொண்ட உருத்திரமாக மணிகள் உண்டு

தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றி தேவர்கள் சிவனிடம் முறையிட்ட போது சிவனது மூன்று கண்களில் இருந்து சிந்திய மணியே உருத்திராக்கம் என்பர். ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங் குருணையைச் சதா நினைவூடடும் சாதனமாக உருத்திராக்ம் விளங்குகின்றது.

சிவ பூசை , தேவார திருவாசக பாராயணம் , புராண படல் ,சிவாலய தரிசனம் போன்றவற்றின் போது உருத்திராக்கம் அணியலாம்.

விபூதியின் கீழ் சந்தனம் , குங்குமம் இவற்றை அணியலாம் குங்குமம் இலக்குமியைக் குறிப்பதனால் நெற்றியில், கூந்தல் வகிட்பதும் இவற்றை பெண்கள் அணிவார்கள். வசந்தனம் உடல் வெப்பத்தை தணிக்கும் என்பதனாலும் அவற்றை அணிவார்கள்.

இவை அனைத்தும் புறத்தே உள்ளே சிவசின்னமாக விளங்குபவை.அகத்தே தயானிக்கும் சிவசின்னமாக திருவைந்தெழுத்தாகன ' நமசிவாய' விளங்குகின்றது.

**த.பர்மிலா,**



காலைக்கதிர் Kalaikkathir

## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர்களும், அதிபர்களும்பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும் எனவும், அவர்கள் போராட்டங்களிலும், வேலைநிறுத்தங்களிலும் ஈடுபடும் போது, எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கு அவர்களால் எவ்வாறு அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் என சிந்திக்க வேண்டுமெனவும்ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஒட்டுமொத்தமாக ஆசிரியர் சேவையிலிருக்கும் சகலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுக்கவில்லை என்றும் அரசியல் சார்ந்தவர்களே இதில் பங்கெடுத்திருப்பதாகதனக்குதகவல் கிடைத்திருப்பதாகவும்சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதனால் ஒட்டுமொத்த ஆசிரியர் தொழிலுக்கும் களங்கம் ஏற்படுமெனவும் தெரிவித்தார்.

சிங்கள பாடசாலைகளுக்குள் மாத்திரமேஇந்தபணிப்புறக்கணிப்பு காணப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி, தமிழ், முஸ்லிம், தனியார் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் வழமைப்போல நடைப்பெறுவதாகவும்தெரிவித்தார்.

கடந்த இரு நாள்களாகப் பாடசாலைக்குச்சென்ற மாணவர்களைப் பாதுகாவலர்கள் திருப்பி அனுப்பியுள்ளனர்என்றுதகவல்கள் வெளியாகியுள்ளதாகவும், அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் சட்டத்தைநடைமுறைப்படுத்துமாறு பொலிஸ்மாஅதிபருக்குபணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முற்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையைத் தரிசித்து ஆசி பெற்றுக்கொண்டார். தலதா மாளிகைக்குசென்றஜனாதிபதியை, தியவடன நிலமே உள்ளிட்ட விகாரைபஸ்நாயக்கநிலமேமார்கள் வரவேற்றனர்.

அதனையடுத்து தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசிர்வதித்தனர்.

இதன்போது கண்டி தலதா மாளிகையில் கலைஞர் அதுல ஹேரத்தினால் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திஉருவாக்கப்பட்ட அரசர் மற்றும் அரசியின் சிலைகளையும் ஜனாதிபதி பார்வையிட்டார். அதனையடுத்து தலதா மாளிகையை தரிசிக்க வந்திருந்த பொது மக்களோடும் ஜனாதிபதி சிநேகபூர்வமாக உரையாடினார்.

அதன்பின்னர் மல்வத்து மகா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி மல்வத்து பீடத்தின் மகா நாயக்க தேரர் வண. திப்படுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டார்.

நாட்டு மக்களுக்கான விசேட உரையின்பின்னர்முதல்முறையாக மகாநாயக்க தேரர்களைச்சந்தித்த ஜனாதிபதி, அரசாங்கத்தின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்தும் அவர்களுக்கு விளக்கமளித்தார். அதனையடுத்து கண்டி பெருநகர அபிவிருத்தி திட்டத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மல்வத்து மகாநாயக்க தேரர்களிடம் கையளித்தார்.

ஆர்ப்பாட்டத்தில்ஈடுபடுவோரின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு மகாநாயக்க தேரர்கள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதி, சம்பள பிரச்சினைகள் ஏற்படாதவாறு அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கான முறைமையொன்று அடுத்த வருடத்திலிருந்து தொடங்கப்படும் என உறுதியளித்தார்.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து தற்போதும் அமைச்சரவை கவனம் செலுத்தியிருப்பதாகவும், அதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் ஆட்சியை பொறுப்பேற்ற வேளையில் மல்வத்து விகாரைக்கு வந்திருந்தேன். அதன்போது நீங்கள் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நாட்டின் ஆட்சியை நெறிப்படுத்தி இன்று வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளோம். அந்த தகவலை உங்களுக்குச் சொல்லவே இன்று இங்கு வந்தேன். வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான இரண்டு இணக்கப்பாடுகளை எட்டியுள்ளோம்.

ஆசிரியர்களுக்கு அடுத்த வருடத்திலிருந்தேசம்பளஅதிகரிப்பை வழங்க முடியும். அது குறித்து நாம் அவர்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறோம். அதேபோல் ஏனைய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக் குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் 3000 - 17000 வரையிலான சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் இவ்வருடத்திலும்10000ரூபாசம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 13000- - 27000 வரையில் ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதனால்ஏனைய அரசஊழியர்கள் குறித்தும் ஆலோசிக்க வேண்டும்.

இவ்வேளையிலும் தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் இயங்குகின்றன. சிங்கள பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமே இவ்வாறான தொழிற்சங்கச் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர். எவ்வாறாயினும் சம்பள விடயம் தொடர்பில் அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கிறது. அதன்படி 2025 ஆம் ஆண்டிலிருந்துஅரசஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கான சரியான முறைமையொன்றை செயற்படுத்த எதிர்பார்ப்பதோடு, அது குறித்து ஆராய்வதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

கண்டி அபிவிருத்தி திட்டத்துக்கமைய நிர்வாக நகரத்தை குண்டசாலைக்கு கொண்டுச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். இந்திய ஐஐரி பல்கலைக்கழகத்தினை கண்டியிலும் ஸ்தாபிக்க பேச்சு நடத்திவருகிறோம். பேராதனை பல்கலைக்கழகத்திற்கு புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும். இவற்றுக்கு மத்தியில் அஸ்வெசும, உறுமய திட்டங்கள் ஊடாக மக்களுக்கும் நிவாரணங்களை வழங்குகிறோம்.' என்றும்ஜனாதிபதி தெரிவித்தார்.

அதனையடுத்து அஸ்கிரிய பீடத்தில் மகாநாயக்க வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவரிடமும் சிறிது நேரம் கலந்தாலோசித்தார்.

ஜனாதிபதி அங்கு தெரிவித்ததாவது:

பாரம்பரிய அரசியல் பிளவுகளுக்கு அமைய செயற்படுவதன் மூலம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. அரசியல் ரீதியாக பிரிந்து செயற்பட்டிருந்தால் இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்திருக்க முடியாது. நாட்டை தற்போதைய நிலைக்கு கொண்டு வர நாடாளுமன்றத்தில்உள்ளஅனைத்து கட்சிகளையும்சேர்ந்தவர்கள்எமக்கு ஆதரவளித்தனர்.

எதிர்க்கட்சியிலும்பலகட்சிகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். முழு நாடாளுமன்றமும்ஆளும்தரப்புடன் இணைந்து செயற்பட்டிருந்தால் ஒரு நாடாக நாம்சிறந்த பெறுபேறுகளை அடைந்திருக்க முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஆளும்தரப்பின் வேலைத்திட்டத்தில் இணையுமாறு நாடாளுமன்றத்தில் உள்ள அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். இன்று உலக அரசியல் மாறிக்கொண்டிருக்கிறது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள முக்கிய கட்சிகள் பிளவடைந்துள்ளன. எனவே, இலங்கையின் பிரதான கட்சிகள் பிளவுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். ஆசிரியர்கள்மற்றும் ஏனைய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆளும்தரப்புக் கவனம் செலுத்தியுள்ளது.

ஒரு கிராமத்தில் நான்குக்கும் மேற்பட்ட அரச அதிகாரிகள் இருந்தாலும், பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பு பெரிதாக இல்லை. தெங்கு தொடர்பான நிறுவனம் இருந்த போதிலும், இலங்கையின் தெங்கு உற்பத்தி குறைந்துதான் செல்கிறது. ஆனால், கேரளாவில் தெங்கு உற்பத்தி அதிகரித்து வருகிறது.

அவர்கள் வேகமாக ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்கின்றனர். எமது மகாவலி வலய அலுவலகங்கள்மற்றும்நீர்ப்பாசனத் திணைக்களம் இயங்கினாலும் மகாவலி வலயமானது ஒரு ஹெக்டேயருக்கு மூன்று மெட்ரிக் டொன் விளைச்சலையே பெறுகிறது.

50வருடங்களில்பெருந்தோட்டக் கைத்தொழில் மூலம் இந்தியா, சீனா போன்ற நாடுகள் பெரும் பொருளாதார நன்மைகளை அடைந்துள்ளன. ஐரோப்பியர் காலத்தில்தேயிலை, தெங்கு, இறப்பர் பொருளாதாரம் காணப்பட்டது. அதன் பின்னர் 1977களில் திறந்த பொருளாதாரத்துடன் உருவாக்கப்பட்ட ஆடை உற்பத்தித் துறை இல்லையென்றால் நாட்டின் பொருளாதாரம் இன்னும் சரிவடைந்திருக்கும்.

கடலாதெனியா, லங்காதிலக மற்றும் அம்பக்கே விகாரைகளை இணைந்துசுற்றுலாவலயமொன்றை உருவாக்கவுள்ளோம். அதற்கான உள்கட்டமைப்புவசதிகளைஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. பௌத்த நாகரீக நிலையத்தை உருவாக்கி பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளை இந்த கண்டி பிரதேசத்திற்கு வரவழைக்க எதிர்பார்த்துள்ளோம். வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகை, உடவத்தகெலேவனப்பூங்காமற்றும் விக்டோரியா அணைக்கட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கண்டியிலும் சில நாட்களை கழிப்பர்.

கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் போகம்பர சிறைச்சாலை அமைந்துள்ள பகுதியை ஹோட்டல் வளாகமாக அபிவிருத்திசெய்வதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், நகரின் நிர்வாகப் பணிகளை குண்டசாலைக்கு மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. திகன பிரதேசத்தில் தொழிநுட்ப வலயமொன்றை அமைப்பதன் ஊடாகஇப்பிரதேசத்தில்தொழில்நுட்ப மேம்பாட்டை ஏற்படுத்த முடியும்.

கண்டி- கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையின் கொழும்பு முதல் மீரிகம வரையிலான பகுதியை சீனாவின் உதவியோடும், குருநாகலிலிருந்து கண்டி வரையிலான பகுதியை ஜப்பானின் உதவியுடன் நிறைவுசெய்வது குறித்தும்தற்போது ஆலோசிக்கப்பட்டுள்ளது.

நவீன விவசாயத்தை கிராமத்திற்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக செய்வதற்கும் உங்களுடைய ஆதரவை தேவைப்படுகிறது.' என்று ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

## தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் நாம் முதலில் ஜனாதிபதி தேர்தலுக்கு செல்லவேண்டும் என்பதை முதலில் கூற வேண்டும். அரசமைப்பு ரீதியாக தேவையானது ஜனாதிபதி தேர்தல். நாட்டில் உறுதிப்பாடற்றநிலைஏற்படும்போது, அதுநேரடியாகமக்களைபாதிக்கிறது. எனவே, இந்த நாட்டுக்குநிலையான ஆளும்தரப்பு தேவை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் பொதுத் தேர்தலை நடத்தலாம். அரசமைப்புக்குபுறம்பாக செயற்பட்டு தேர்தலை ஒத்திவைக்க நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் உள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன் 2022ஆம் ஆண்டு மே மாதம் இந்த நாட்டில் இருந்த நிலைமையை நாம் அனைவரும் புரிந்து கொண்டோம். மக்கள்வீதிகளில்எரிபொருள்வரிசை மற்றும் எரிவாயு வரிசையில் நின்றுகொண்டிருந்தனர். ஒரு காலத்தில் மருத்துவமனைகளில் அத்தியாவசியமருந்துகள்இல்லாமல் போனது.

ஈஸ்டர்தாக்குதல்மற்றும்கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையால் எங்களுக்கு ஏற்பட்ட வெளிநாட்டு நிதி பிரச்சினைகளால் நாங்கள் எதிர்கொண்டசூழ்நிலையைநாங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

அப்போது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மட்டுமே சவாலை ஏற்றுக்கொண்டார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்றத்தில் சிறு குழுவாக நாங்கள் உதவி செய்தோம். அனுபவத்துடனும்முதிர்ச்சியுடனும் சவால்களைஏற்கும்திறமையுடனும் அந்த வேலையைச்செய்வார்என்று நாங்கள் நம்பினோம்.

இரண்டுவருடங்கள்பின்னோக்கிப் பார்க்கும் போது, நாம் எதிர்பார்த்ததைச் செய்திருக்கிறார். இப்போது ரணில்தான்ஆள்என்றகருத்துகிராம மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அப்படியானால், அன்று நாங்கள் எடுத்த முடிவு சரியானது என்று நினைக்கிறோம்.

நாட்டுக்கு நல்ல செய்தியை கூறும்போது, இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு நம்பிக்கையுள்ள மனிதனும் நல்லதை காண்கிறான். அதை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்னொரு கூட்டத்தினர் நல்ல செய்தி சொன்னால் அதை பாசாங்குத்தனத்துடன் பார்க்கிறார்கள்.

இந்த போஸ்ட்டர்மூலம்நாட்டை நேசிக்கும் மக்களுக்கும், இந்த நாட்டை அழிக்க நினைக்கும் மக்களுக்கும் இடையிலான பிரிவினையை நாம் தெளிவாக காண்கிறோம்.

சில எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் விடுதலை முன்னணியைப் போல ஐக்கிய மக்கள் சக்தி அரசியல் தலைவர்கள் தொழிற்சங்கங்களின் தலைவர்கள், நாடு நன்றாக இருக்கும் நேரங்களில் எப்போதும் வேலைநிறுத்தத்தில்ஈடுபட்டுள்ளனர்.

2023 மார்ச்சில் சர்வதேசநாணய நிதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு முதல் தவணையை பெறுவதற்கு ஒருவாரத்துக்குமுன்பு, இதுபோன்ற வேலைநிறுத்த அலைகளை ஏற்படுத்தியது.

ஈஸ்டர் தாக்குதலுக்கு பிறகு சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்துள்ளது.சுற்றுலாப்பயணிகள் வரத் தொடங்கிய நேரத்தில் கொவிட் தொற்றுநோய் காரணமாக நாட்டை மூட வேண்டியிருந்தது.

நாட்டைதிறந்துவிட்டு சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியதும் தொழிற்சங்கத்தினர்வீதியில்இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து அவர்களை வரவிடாமல் தடுத்தனர். இன்று ஒரு நல்ல செய்தி வரவிருக்கும் நேரமும் இவ்வாறு செய்கின்றனர்.

அதை அழித்து வேறாக மாற்ற வேண்டும் என்று இன்று வேலைநிறுத்த அலை நடத்தப்படுகிறது. கடந்த காலத்தில் இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன்அரசஊழியர்கள்சில சிரமங்களுக்குள்ளாகியிருந்ததாக நான் நம்புகிறேன்.

ஆனால், கொவிட் தொற்றுநோய்களின்போது நம் நாட்டின்தனியார்துறைகூடசரிந்தது என்பதைநினைவில்கொள்ளுங்கள். ஊழியர்களின் சம்பளம் கூட குறைக்கப்பட்டது. ஆனால், அரசு அதைச் செய்யவில்லை. அரசு அரச ஊழியர்களை முடிந்தவரை பாதுகாத்தது. அதனைச்செய்த அரச அதிகாரிகள், தமது சம்பளத்தை இப்போதாவது அதிகரிக்க வேண்டும் என்றநம்பிக்கையில், இந்த சம்பளப் பிரச்சினைகளை ஆராய ஜனாதிபதி குழுவிருக்கும்போது, அந்தக் குழுவின் ஊடாக தமக்கு சாதகமான பதில் கிடைக்கும் எனத் தெரிந்தும், தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்கட்சிகளின்நிகழ்ச்சிநிரலை செயல்படுத்த இந்த வேலை நிறுத்த ஆர்ப்பாட்டங்களைச்செய்கிறார்கள். அவர்களின் வேலையினால்தான் நாங்கள் இவ்வாறான ஆர்ப்பாட்டம் நடத்துவதாக கூறுகிறார்கள்.

இந்த சம்பள முரண்பாட்டை 2025 ஜனவரிக்குள் தீர்க்க ஒரு குழுவை அமைத்து 3 மாதங்களுக்குள் அறிக்கை அளிக்குமாறு கூறியுள்ளோம். தருகிறோம் என்று சொன்னாலும், பிரான்ஸ் மாநாட்டின் மூலம் நம் நாட்டுக்கு கிடைக்கும் சலுகையை குறைத்து, அரச சேவையை நல்ல நிலைக்கு கொண்டுசெல்லும்போது, இந்த நாட்டை அராஜகமாக்கி, மீண்டும்சீரழிக்க இவர்கள்எல்லாம் செய்கிறார்கள்.

பொருளாதார ரீதியாக அவர்களின் நிகழ்ச்சி நிரலை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். எனவே, இதனை இந்நாட்டு மக்கள் புத்திசாலித்தனமாக பார்ப்பார்கள் என நான் நம்புகிறேன் என்றார்.

## வட்டியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகச் சாடியுள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின்கீழ், 265ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், களுத்தறை, புளத்சிங்களமதுராவல, ரெமுனமகா வித்தியாலத்திற்குவழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு ஒரு இலட்சம்ரூபாநிதியுதவியும்வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2028 வரை கடனைச் செலுத்துவதற்கு கால அவகாசம் விதிக்கப்பட்டுள்ளது. 2028 முதல் கடன் தவணைகளைச் செலுத்தவேண்டும். இது ஒரு நல்ல விடயம் போல் தெரிந்தாலும், சர்வதேச நாணய நிதியத்தின் 2023 மார்ச் அறிக்கை கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின்படி, நாம் 2033 முதலே கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதிய அறிக்கையில்அவ்வாறுகுறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த இணக்கப்பாட்டு கலந்துரையாடலினால் 2033 இலக்கைஎட்டமுடியாதுபோயுள்ளது. 2028 ஆம் ஆண்டு முதல் கடன் தவணைகளைச் செலுத்துவதற்கு இணக்கப்பாடுகள்எட்டப்பட்டுள்ளன.

சகல நாடுகளையும் விட நமது நாடு கடன் மறுசீரமைப்புச் செயல்முறையை வேகமாக பூரத்தி செய்து கொண்டதாக தெரிவிக்கப் பட்டிருந்தது. அது முற்றிலும் தவறானகருத்தாகும். எமதுநாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை இன்னும் முடிவடையவில்லை. செயல்முறையை முழுமைப்படுத்தாமல் இவ்வாறு பச்சைப் பொய்யை மக்களிடம் சொல்வது

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## வட்டியுடன்....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

தவறாகும். எம்மை விட வேகமாக தங்கள் கடனை மறுசீரமைப்புச் செயல்முறையை முழுமையாக மறுகட்டமைத்த பல நாடுகள் உள்ளன.

கானாபோன்றநாடுமுன்னெடுத்த விரிவான கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் அந்நாட்டின் மொத்த கடனில் 37 சதவீதத்தைக் குறைக்க முடிந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையின் அடிப்படையில் நமது நாட்டில் வட்டிக் குறைப்புக்கான இணக்கப்பாடு எட்டப்படவில்லை. வட்டியையும் கந்துவட்டியையும் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு நாடாக நாம் ஒரு முழுமையான இணக்கப்பாட்டை எட்டவில்லை. சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்கள் அடங்களாக சர்வதேச வணிக்கடன் தரப்பினரோடு இதுவரை எந்த நிலையான இணக்கப்பாடுகளையும் எட்டவில்லை. இந்த கலந்துரையாடல்கள் ஜூலை 3 ஆம் திகதி வரை தொடர்கிறது. இறுதி இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால், எமது நாட்டுக்கு எதிராக வழக்குத் தொடரவும் குறித்த தரப்பினர் தயார் நிலையில் உள்ளனர்.

கானா நிதி அமைச்சர் தனிப்பட்ட முறையில் சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்களுடன் பேச்சு நடத்தியதுதான், கானா நாடு எமது நாட்டை விட வேகமாக ஒரு விரிவான ஒப்பந்தத்தில் நுழைந்ததற்கு வழிவகுத்த காரணமாகும். எமது நாட்டின் நிதியமைச்சர் அவ்வாறான கலந்துரையாடலுக்குச் செல்லவில்லை. இதனால் ஆளும் தரப்பு பொய்யுரைத்து வருகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் கடன் சலுகையைப் பெற இந்தக் கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்பட்டது. கானா மற்றும் சாம்பியா போன்ற நாடுகள் கடன் மறுசீரமைப்புக்கு வெளிநாட்டு வருமானம் மற்றும் பண வனுப்பல்களை அடிப்படைகளாக கொண்டிருந்தன.

கானா மற்றும் சாம்பியா வெளிநாட்டு வருவமானம் மற்றும் பணவனுப்பல்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த பேச்சுக்களை முன்னெடுத்து இருந்தாலும், ஒரு நாடு என்ற ரீதியில் நாம் இந்த பேச்சுக்களிலும் கலந்துரையாடல்களிலும் தவறிழைத்துள்ளோம். இங்கு பிழை நேர்ந்துள்ளது.

சீன அபிவிருத்தி வங்கியுடனும் நாம் கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டும் தான். சாம்பியா மற்றும் ஈக்வடார் ஆகிய நாடுகளுக்கு இந்த வங்கி இருதரப்பு கடன்களையே வழங்கியிருந்தாலும், எமது நாட்டுக்கு வணிகக் கடனையே வழங்கியுள்ளது. இங்கும் பல பிரச்சினைகள் எழுகின்றன.

சமத்துவ அடிப்படையில் சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வருவமாறு இருதரப்பு கடன் வழங்குநர்களின் ஒரு தரப்பான பாரிஸ் கிளப் அறிவிப்பை விடுத்துள்ளது. இது தொடர்பில் ஆளும் தரப்பு மேற்கொள்ளும் நடைமுறைகள் என்ன?

எக்ஸிம் வங்கி, எமது நாட்டில் உள்ள அரச முயற்சியாண்மைகளுக்கு கடன் வழங்கியுள்ளது. நீர் வழங்கல் மற்றும் தாமரை கோபுரம் நிர்மாணிப்பதற்கு இந்த கடன் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்த எந்த வெளிக்கொணர்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தற்போது சிறீ லங்கன் விமான சேவையின் 179 மில்லியன் டொலர் பிணைமுறி பத்திரங்களுக்கான காலக்கெடு முடிவடையவுள்ளது. இந்த பத்திரதாரர்கள் கடன் வெட்டுக்கு உடன்பாடில்லை.

இவர்கள் வழக்கு தொடரவும் தயாராகி வருகின்றனர். இந்த பிணைமுறி பத்திரங்களின் காலக்கெடு முடிவடையும் திகதி நெருங்கி வருவதால், இது குறித்து ஆளும் தரப்பு எடுக்கும் கொள்கை நிலைப்பாடு என்ன? அந்த கொள்கை நிலைப்பாட்டை நாட்டு மக்கள் தெரிந்து கொள்வது அவசியம்.

இதுபோன்ற பல சிக்கல்களும், பிரச்சினைகளும் இருக்கின்றன. இது குறித்த சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தத் தகவல்கள் தொடர்பில் அறிவியல்பூர்வமாக பகுப்பாய்வுகளை செய்து, நாட்டுக்கு ஏற்படும் நன்மைதீமைகள் குறித்த உண்மைகளை மக்களிடம் முன்வைக்கத் தயார்.

எமது நாட்டின் கல்வித்துறையில் சேவையாற்றி வரும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தங்க ளது உரிமைகளுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்க அவர்களுக்கு இருக்கும் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தியுள்ளனர்.

அது அவர்களின் உரிமை என்றாலும், அவர்கள் முன்னெடுத்து வந்த போராட்டத்துக்கு மிலேச்சத்தனமாக ஆளும்தரப்பு மிகவும் அடக்குமுறைத்தனமாக நடந்து கொண்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கல்வித் துறையில் 7 பகுதியினர் உள்ளனர். சகல அரசியல்வாதியும் கல்வி குறித்து பேசுகின்றனர். கல்வியில் மனித வளத்துக்கு ஏற்ற சூழலை உருவாக்கி, அவர்களினது சுய திருப்தியை மேம்படுத்தும் பயணத்தை மேற்கொண்டால் தான் கல்வியில் குறிப்பிட்ட முன்னேற்றத்தை அடைய முடியும்.

இந்நாட்டிலுள்ள 10,096 பாடசாலைகளில் 41 இலட்சம் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும், அவர்களை புத்திஜீவிகளாகவும் மாற்றுவதில் முக்கிய பங்காற்றுகின்ற இந்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் இவ்வாறு தாக்கப்பட்டமைக்கு வருந்துகிறேன்.

ஆசிரியர்கள் எப்பொழுதும் தங்கள் மாணவச் செல்வங்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தே செயற்பட்டு வருகின்றனர். சிறப்புச் சலுகைகள் ஏதும் பெறாமல் மாலை வேளையில் கூட, பாடசாலைகளில் மேலதிக வகுப்புகளை நடத்தி மாணவர்களை பரீட்சைகளில் தேர்ச்சியடையச் செய்வதில் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

அவர்களின் முன்மொழிவுகளை முன்வைக்க அவர்களுக்கு வாய்ப்பளிக்காமல், மிலேச்சத்தனமாகவும், காட்டுமிராண்டித்தனமான முறையிலும் தாக்கப்பட்டதற்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான திட்டங்களை உடனடியாகத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

மோசமான காலநிலை காரணமாக கொழும்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்குத் தீர்வுகாண்பதற்காக துறைசார் நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் சேதமடைந்த பகுதிகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் குறித்த பிரதேச அரசியல் பிரதிநிதிகள் நேரில் சென்று அவதானித்தனர் எனவும், இயற்கைக் காரணங்களைப் போன்று, ஒழுங்கற்ற மனித செயற்பாடுகளும் வெள்ள நிலைமை ஏற்படக் காரணமாக உள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்காலத்தில் மீண்டும் இதுபோன்ற வெள்ள நிலைமை ஏற்படாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களை விரைவாக தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த, நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம். நபீல், துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் வெள்ள நிலைமையை எதிர்கொண்ட பிரதேசவாசிகள் சிலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## இன்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் ஆசிரியர் பணிப்புறக்கணிப்பு இன்றி மாணவர்களுக்கு தொடர்ச்சியான கல்வியை வழங்கி வருகின்றது. இந்த ஆசிரியர் பணிப்புறக்கணிப்பு காரணமாக அந்த பாடசாலைகளில் கல்வி கற்க முடியாத மாணவர்களே பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்கு தீர்வாக 2022 ஆம் ஆண்டு குழுவொன்று நியமிக்கப்பட்டு தரம் ஷ்ஷ்ஷ் 2 இன் சம்பளம் 14 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாதாந்தம் 3750 ரூபாவினால் சம்பளம் அதிகரிக்கப்படுகிறது.

மேலும், தரம் 1 இன் சம்பளம் 26 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த தரத்தின் சம்பளம் 17,720.00 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் முழு அரச சேவையினதும் சம்பளம் 10,000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்த சம்பள அதிகரிப்பானது ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படும். எதிர்காலத்தில் எந்த அரசாங்கமும் கடன் பெறுவதற்கோ அல்லது பணம் அச்சிடுவதற்கோ திறைசேரியினால் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றார்.

## ஜப்பானும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023 இல் உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழு ஒசிசியை ஆரம்பித்துவைத்ததன் மூலம் இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஜப்பான் பிரதான தலைமைத்துவத்தை வழங்கியிருந்தது.

பரிஸ்கிளப்நாடுகள்பரிஸ்கிளப்பில் அங்கம் வகிக்காத நாடுகளிற்கு இடையில் நடுத்தரவருமானம் பெறும் நாடுகளின் கடன்மறுசீரமைப்பு தொடர்பில் ஒருங்கிணைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உலகின் முதலாவது குழு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கட்டமைப்பின் கீழ் இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை இறுதிசெய்துள்ளமை ஒருமைல் சாதனை என ஜப்பானின் நிதியமைச்சர் சுஜிகி சுனிச்சி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நடுத்தரவருமானம் பெறும் நாடுகளின் கடன்மறுசீரமைப்பிற்கான ஒரு உதாரணமாக இது விளங்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழுவிற்கு வெளியே உள்ள இருதரப்பு கடன்வழங்;குநர்களுடன் தனியார் கடன்வழங்குநர்களுடன் இலங்கை கடன்மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தும் என எதிர்பார்க்கின்றேன் என தெரிவித்துள்ள அவர் வெளிப்படையான ஒப்பிடக்கூடிய விதத்தில் இதனை இலங்கை முன்னெடுக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## ஐ.நா.....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைளை தமிழ் முற்போக்கு கூட்டணி மேற்கொள்ளும். அதற்கான பலம் மற்றும் தூரப்பார்வை எம்மிடம் உள்ளது. அடுத்த ஆட்சி மாற்றத்துக்கு உள்ளே சென்று திட்டங்களை வகுப்பதை விட, முன்கூட்டியே முன் தயாரிப்பு நடவடிக்கைகளில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம்.

இந்த விவகாரம் தொடர்பில் மலையக சிவில் சமூகத்துடனும் நாம் தற்போது கலந்துரையாடுகிறோம். மக்கள் ஆணை கொண்ட அரசியல் பிரநிதிகளுடன் இணைந்து பணியாற்ற கூடிய மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பற்றியும் நாம் வெகு விரைவில் சர்வதேச சமூகத்துக்கு அறிவிப்போம்.

ஐநா நிறுவனங்களான உணவு விவசாய நிறுவனம், யுனிசெப், உலக உணவு நிறுவனம் ஆகியவை ஊடாக எமக்கு தொழில்நுட்ப, அபிவிருத்தி, ஒத்துழைப்புகளை வழங்க ஐநா முன் வர வேண்டும் என்ற கோரிக்கையையும், நாம் இலங்கை ஐநா வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேயிடம் முன் வைத்துள்ளோம். எமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட இலங்கை ஐநா வதிவிட பிரதிநிதி ஆவன செய்வதாக உறுதி அளித்தார்.







# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய வாசிகசாலைக்கு புத்தகங்களை அன்பளிப்புச் செய்யுமாறு வேண்டுகோள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் திறம்பட இயங்கி வருகின்றகலாசாரமத்தியநிலையத்தின்வாசிகசாலை எதிர்வரும் நாள்களில் திறக்கப்படவுள்ளது.

இந்த வாசிகசாலையை பாடசாலையில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் உட்பட கலாசார மத்திய நிலைய மாணவர்கள் மற்றும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள் எனப்பலரும்பயன்படுத்தி, நன்மையடைவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தெரிவித்தார்.

இலங்கை தேசிய நூலகம் 2024 ஆம் ஆண்டுக்கான ஒக்ரோபர் வாசிப்பு மாதத்தையொட்டி, 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' என்ற கருத்திட்டத்திற்கு அமைய, கலாசார மத்திய நிலையத்தின்வாசிகசாலைகளைமேம்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. அந்தக் கருப்பொருளை வெற்றிகொள்வதற்கான சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் செயற்பாடாகத்தான் இந்த வாசிகசாலையை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, மாணவர்களுக்கான பல போட்டி நிகழ்ச்சிகளும்நடத்தஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

சாய்ந்தமருது மட்டுமன்றி, குறித்த பிரதேசத்தில் உள்ளமுக்கியமானஇலக்கியவாதிகள்,இலக்கியதுறை சார்ந்தஎழுத்தாளர்களிடம்இந்தவாசிகசாலைக்கான புத்தக சேகரிப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த வாசிகசாலையைத் திறப்பதற்கு தற்போது புத்தகங்கள் தேவைப்பாடாகவுள்ளதால், தேவைக்கு மேலதிகமாகதங்களிடம்இருக்கின்றபுத்தகங்களையும் வாசிக்கப்படாது தேங்கிக்கிடக்கின்றபுத்தகங்களையும் மேற்படி வாசிகசாலைக்கு அன்பளிப்புச் செய்யுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் எப்பாகத்தில் நீங்கள் இருந்தாலும் தங்களிடம் தேவைக்கு மேலதிகமாகவோ அல்லது தங்கள் வீட்டில் தேங்கிக் கிடக்கின்ற கவிதை, கதை, சிறுகதை, நாட்டார் பாடல்கள், குறும்பா, நாவல், சித்திரம் போன்ற கலை தொடர்பான இன்னோரன்ன புத்தகங்களோ அல்லது பாடசாலை மாணவ, மாணவிகளுக்குத் தேவையான, கல்வியை மேம்படுத்தக்கூடிய எந்தப் புத்தகங்களோ எதுவாக இருந்தாலும் அவைகளை இந்த வாசிகசாலைக்கு அன்பளிப்புச் செய்யலாம்.

புத்தகங்களைஅன்பளிப்புச்செய்யவிரும்புவோர் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் 077 758 0663 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது நிலையைப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், பொலிவேரியன் கிராமம், சாய்ந்தமருது 16 எனும் முகவரிக்கோ புத்தகங்களை அனுப்பி வைக்க முடியும் என்றும் நிலையத்தின் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

குறுகிய காலத்தில் இந்த சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டாலும், இந்நிலையத்தில் கற்பிக்கின்ற பாடநெறிகள் மூலம் மாணவர்கள் நன்கு தேர்ச்சி பெற்று முதல் இடங்களைத் தட்டிக் கொண்டு, இமாலய சாதனை படைத்து வருவதால், கலாசார மத்திய நிலையம் பலரது பாராட்டையும் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.(05)

# ஆங்கில அறிவு அகிலத்தையே ஆளும் செயலர் கோபாலரெத்தினம் தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

தாய் மொழிக்கு அப்பால் ஆங்கில



மொழி அறிவு அகில உலகத்தையே ஆளும் வல்லமை பொருந்தியது.

இவ்வாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி , நீர்ப்பாசனம், மோட்டார் வாகன போக்குவரத்து, கட்டடங்கள் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின் இணைப்பு, நீர் விநியோகம் ஆகிய ஏழு துறைகளுக்கான அமைச்சின் செயலாளர்கலாநிதிமூ.கோபாலரத்தினம் தெரிவித்தார்.

காரைதீவு றேடியன்ற் இங்கிலீஷ் அக்டெமி நிறுவனத்தின் வருடாந்த பாராட்டு விழா பணிப்பாளர்களான எந்திரி லயன் ம.சுதர்சன், திருமதி சங்கீதா சுதர்சன் தலைமையில் சாய்ந்தமருதுலீமெரிடியன்மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

அச்சமயம் பிரதம அதிதியாக கலந்துகொண்ட செயலாளர் கோபாலரெத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

விழாவில் கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி ஆங்கில பாட விரிவுரையாளர் கலாநிதிஎன்.பிரசாந்தன், உதவிக்கல்விப் காரியப்பர், முன்னாள் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எம்ஆர்சண்முகநாதன், எம். எம்.கலீல், அதிபர் கே.புண்ணியநேசன், முன்னாள் உப தவிசாளர் லயன் கே.தட்சணாமூர்த்தி உள்ளிட்ட அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வாரம் கிழக்கு மாகாணத்தில் உயர் ஆங்கில தேசிய டிப்ளோமா பயிற்சியை பூர்த்தி செய்த 252 பேருக்கு ஆங்கில பாட ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. மேலும் கல்வியில் பட்டம் பெற்ற இன்னொரு தொகையினருக்குஆங்கிலபாடஆசிரிய நியமனம் வழங்கப்படவிருக்கிறது. எனவே, மாணவர்கள் தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதேவேளை பிற மொழி கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் எமது ஆளுமை விருத்தி அடைவதோடு உலகத்தை தரிசிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. –என்றார்.

மாணவர்களின் சிறப்புநிகழ்ச்சிகள் மேடை ஏறின. அத்துடன் அனைத்து மாணவர்களுக்கும் பரிசுகள்



பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, சர்வதே விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி இம்தியாஸ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அதிதிகளுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டன.(05)

# திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் ஆடி அமாவாசை உற்சவம்

## அதிகாரசபைக் கூட்டம்



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கின்றது.

அது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகளைத் தீர்மானிப்பதற்கான அதிகாரசபைக்கூட்டம் ஆலய



தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் ஆலய முன்றிலில் சனிக்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அதேவேளை திருக்கோவில் பிரதேசசெயலாளர் த.கஜேந்திரன் முன்னிலையில் நடைபெறும் அனுசரணைக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன.

இந்த வருடத்திற்கான ஆடி அமாவாசை உற்சவம் ஜூலை மாதம் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன்நிறைவடையவுள்ளது. மறுநாள் பூங்காவனத்திருவிழா தொடர்ந்து மறுநாள் வயிரவர் பூஜையுடன் நிறைவடையவுள்ளது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ் வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது.

அனுசரணைக்கூட்டத்தில் வட்டாரப் பிரதிநிதிகள் மற்றும் உபயகாரர்கள் கலந்துகொள்வர். உற்சவத்திற்கான உபயகாரர்கள் முதல் சகல செயற்பாடுகளுக்கான தீர்மானங்களும் இந்தக் கூட்டத்தில்எடுக்கப்பட்டவுள்ளனஎனஆலயபரிபாலன சபை செயலாளர் கே.செல்வராசா தெரிவித்தார். (05)

# அம்பாறை விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக அனஸ் நியமனம்



(நவாஸ்)

அம்பாறை மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக, நிந்தவூரைச் சேர்ந்த ஏ.எல். அனஸ் அஹமட், அண்மையில், அம்பாறை மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு விளையாட்டு உத்தியோகத்தராக இணைந்துகொண்ட இவர், 2013 ஆம் ஆண்டு வரை இறக்காமம் மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பிரிவுகளில் விளையாட்டு உத்தியோகத்தராக பணியாற்றினார்.

இந்தக் காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் கபடி விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்த இவர், 2013 ஆம் ஆண்டு முதல் அம்பாறை மாவட்ட கபடி பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி வந்துள்ள நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும்அபிவிருத்திதிணைக்களத்தின் பணிப்பாளர்நாயகத்தால்இவருக்கான நியமனம்வழங்கிவைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## விறகு வெட்டச் சென்றவர் காட்டு யானை தாக்கி சாவு

அநுராதபுரம் பிரதேசத்தில் கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

கஹட்டகஸ்திகிலிய பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் செவ்வாய்க்கிழமை காலை தனது வீட்டிற்கு அருகில் உள்ள வனப்பகுதிக்கு விறகு வெட்டுவதற்காக சென்றிருந்த போது இவ்வாறு காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## சித்திர கண்காட்சி கிண்ணியாவில்







(எச் எம் ஹலால்தீன் )

தேசிய சித்திரக் கலைஞரும் ஓவியருமாகிய ஆசிரியர் ஸஹீலின் ஓவியக்காட்சியும் கைப்பணிப் பொருள்கள்காட்சியும் கிண்ணியா மத்திய கல்லூரி அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம் பெற்றது.

இம்மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இக்கண் காட்சியானது ஐந்து நாள்கள் தொடர்ந்து பாடசாலை மாணவர் களுக்கும் வெளி ஆள்களுக்கும் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

இக் கலைஞரின் ஓவிய கண்காட்சியைப் பார்வையிடு வதற்காகதிருகோணமலைமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்இம்ரான் மஹ்ரூப்பார்வையிட்டுகலைஞரை வாழ்த்தி இருந்தார்.

இதேவேளை அவரது சகோதரிகளும்இக்கண்காட்சியை பார்வையிட வந்திருந்ததோடு கலைஞரையும் பாராட்டினார்.

இது ஒரு சிறந்த கலைஞனின் சிறந்த படைப்பாகும் என தெரிவித்ததோடு, இது அக் கலைஞனின் திறமைக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

ஒரு சிறந்த கலைஞனின் உணர்வூக்கமான ஆக்கப்பூர் வமான படைப்புக்கள். அவர் கைவண்ணத்தை மெருகூட் டுகின்றன கழிவுப் பொருள்களால் கலைகளின் உருவாக்கம்.

மிகத் தத்ரூபமான ஆக்கங்கள்.

ஒன்றைக் கண்டாலும் அதனை அதைப்போலவேஉருவாக்கும்திறன் - பிறவியிலேயே உருவாகியிருக்க வேண்டும்.

ஓவியங்கள் அப்படியே உரிய இடங்களையும் நபர்களையும் கண்முன்னே கொண்டு வருகிறது. அந்நபர்களின் உணர்வுகள் அப்படியே ஓவியத்தில் தெரிகிறது. உண்மையில்பாராட்டாமல்இருக்க முடியாது எனப் பலரும் தெரிவித்துச் சென்றனர். (05)



# பௌர்ணமியில் பேய் வீட்டிற்கு சென்ற மூவர் வேடம் அணிந்த சிறுவனின் மீது தாக்குதல்

களுத்துறை பிரதேசத்தில் பொசன் பௌர்ணமி தினத்தைமுன்னிட்டுசிறுவர்களால்வடிவமைக்கப்பட்ட பேய் வீடொன்றிற்கு சென்ற மூவர் அங்கு பேய் வேடம் அணிந்திருந்த சிறுவன் ஒருவரை தாக்கி காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை வடக்கு , பெல்பொல பகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுவனே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சிறுவன் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சிறுவர்களால் வடிவமைக்கப்பட்ட பேய் வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்ட மூவரும் பார்வையாளர்களாக சென்றுள்ளனர்.

இதன்போது, காயமடைந்த சிறுவன் பேய் வேடம் அணிந்து இவர்களைப் பயமுறுத்தியுள்ளார்.

இதன்போது, கோபமடைந்த மூவரும் சிறுவனை தாக்கி காயப்படுத்தியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 18 கோடி ரூபாய் பெறுமதியான தங்க ஜெல்களை கடத்திவந்த 6 பேர் விமான நிலையத்தில் கைது



ஆசனவாயிலிலும் பயணப் பொதிகளிலும் சுமார் 18 கோடி ரூபா பெறுமதியான தங்க ஜெல் உருண்டைகளை மறைத்து வைத்துக்கொண்டு துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த 06 இலங்கையர்களை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கல்முனை, மூதூர், கொழும்பு-10, கலகெடிஹேன மற்றும் மினுவாங்கொடை ஆகிய இடங்களில் வசிக்கும் 30 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட ஆறு நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் .

கைது செய்யப்பட்டவர்கள், துபாயில் இருந்து சென்னைக்கு வந்து அங்கிருந்து செவ்வாய்க்கிழமை பிற்பகல் இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதன் போது விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட ஸ்கேன் பரிசோதனையின் போது இவர்களிடம் தங்க ஜெல் உருண்டைகள் இருப்பது தெரியவந்துள்ளது.

அவர்களில் 4 பேர் ஆசனவாயிலில் தங்க ஜெல் உருண்டைகளை மறைத்து வைத்திருந்ததாகவும் மேலும் இருவர் 08 கிலோ 632 கிராம் எடையுள்ள 22 தங்க ஜெல் உருண்டைகளை பயணப்பொதிகளில் மறைத்து வைத்திருந்ததாகவும் விமான நிலைய சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதானவர்கள் புதன்கிழமை நீர்கொழும்பு நீதிவான்நீதிமன்றில்ஆஜர்படுத்தப்பட்டதுடன்மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இணைய மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டவர்களும் கைது

## நீர்கொழும்பில் மொத்தம் 33 பேர் மாட்டினர்

பல வெளிநாட்டு பிரஜைகளையும் உள்ளூர் மக்களையும் குறிவைத்து இணையம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் வெளிநாட்டு பிரஜை உட்பட 33 பேரை நீர்கொழும்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கைது செய்துள்ளது.

டிக்டொக் வீடியோக்களை லைக் செய்வதற்கும், கருத்து தெரிவிப்பதற்கும் பணம் தருவதாக கூறி வட்ஸ்அப் குழு ஒன்றில் பெண்ணொருவர் இணைந்துள்ளார்.

ஆரம்பத்தில் லைக் மற்றும் கமெண்ட் செய்ததற்காக இந்த பெண் பணம் பெற்றுள்ளார். பின்னர் தொடர்ந்து பணத்தை பெற்றுக்கொள்ள வங்கிக் கணக்கில் 5.4 மில்லியன் ரூபா முதலீடு செய்துள்ளார்.

பணத்தை முதலீடு செய்த போதிலும் அவர் திரும்ப பணத்தை பெறவில்லை. இந்நிலையில், குறித்த பெண் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பெண்ணின் முறைப்பாட்டிற்கு அமைய வங்கிக் கணக்குகள் தொடர்பான மேலதிக விசாரணைகளின் போது தந்தை மற்றும் மகன் ஆகிய இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை, பீட்சா ஆர்டர் செய்யப்பட்ட வங்கி கணக்கொன்றின் மூலம் நீர்கொழும்பிலுள்ள வீடொன்றில் சோதனை நடத்திய போது இரண்டு பெண்கள் உட்பட 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மோசடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட 57 கையடக்க தொலைபேசிகள், 13 கணினிகள் மற்றும் 3 மடிக்கணினிகள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

நீர்கொழும்பில் மற்றொரு சொகுசு விட்டில் பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 19 கூடுதல் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த இடத்தில் இருந்து 52 மொபைல் போன்கள் மற்றும் 33 கணினிகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பொலிஸார் கைப்பற்றினர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த மோசடியில் வெளிநாட்டவர்களும் சிக்கியது தெரிய வந்தது.

இவர்களின் கிளைகள் டுபாய் மற்றும் ஆப்கான் இராச்சியங்களிலும் இருப்பதும் தெரியவந்துள்ளது.

சமூக ஊடகங்கள் வாயிலாக பிரபல நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிகள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக செயற்படுமாறு இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது. (05)

# கோலாகலமாக நடைபெற்ற திருக்கோவில் வலயமட்ட மெய்வல்லுநர் விளையாட்டுவிழா












(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் கல்வி வலயத்தின் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வானது புதன்கிழமை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமார் கலந்து சிறப்பித்தார்.

காலை 9 மணியளவில் அதிதிகள் மலர்மாலை அணிவித்து பாண்டுவாத்தியம் கடேட் அணிவகுப்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் போட்டி நிகழ்வுகளில் திருக்கோவில் வலயத்திற்கு உட்பட்ட 47 பாடசாலைகள் பங்கு பற்றிருந்தது.

இந் நிகழ்வுகளுக்கு ஏனைய அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான சோ.சுரநுாதன் ஏ.நசீர் ஏ.நௌபர்டீன் கே.கமலமோகனதாசன் திருக்கோவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன், பொத்துவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், ஆலையடிவேம்பு கோட்டக் கல்விப்பணிப்பாளர் கே.கமலமோகனதாசன் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை ஆதிபர்கள், பயிற்று விற்பாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், உடற் கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கடந்த வருடம் கிழக்கு மாகாண மட்டத்தில் 2 ஆவது இடத்தைப்பெற்று சாதனை படைத்தமைக்காக வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமார் உடற்கல்வி கல்விப் பணிப்பாளர்களான கே.கங்காதரன் ஏ.நசீர் உள்ளிட்ட விளையாட்டுதுறை உத்தியோகத்தர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மாகாண மட்ட சாதனை வீர வீராங்கனைகள் பரிசு வழங்கிபாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தொகுத்தளித்தார். விளையாட்டு ஆசிரிய ஆலோசகர் கே.சதீஸ்குமார் நன்றியுரையாற்றினார்.(05)

# கல்முனை கடல் சுற்றாடல் தொடர்பான கழிவு முகாமைத்துவ கலந்துரையாடல்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லைக்குட்பட்ட கடல் சுற்றாடலின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் புதன்கிழமை மாநகர சபையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் அறிவுறுத்தலின் பிரகாரம் மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீமின் நெறிப்படுத்தலில் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவி முகாமையாளர் கே. சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கடல் மற்றும் கடலோர பிரதேசங்களின் சூழல் பாதுகாப்புக்கு அச்சுறுதலாக காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

குறிப்பாக கடற்கரையை அண்மித்த பகுதிகளில் இயங்கி வருகின்ற தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் ஏற்படும் சூழல் பாதிப்புகள், அதனால் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதனை முகாமைத்துவம் செய்வதில் காணப்படுகின்ற சவால்கள் மற்றும் தீர்வுகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.



மேலும், அடுத்த கூட்டத்தில் இதற்கான தீர்வுகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மத்திய சுற்றாடல் அதிகார சபை, கல்முனை பிரதேச செயலகம், கரையோரம் பேணல் திணைக்களம் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகளும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களும் பங்கேற்றிருந்தனர்.(05)

# தொடருந்து நிலையம் அருகிலிருந்து பல்கலை மாணவன் சடலமாக மீட்பு

ஜா - எல ரயில் நிலையத்திற்கு அருகிலிருந்து பல்கலைக்கழக மாணவர் ஒருவர் செவ்வாய்க்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக ஜா - எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்லம, சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு - சிலாபம் ரயில் மார்க்கத்தில் பயணித்த ரயிலொன்றில் மோதி உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜா - எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2024இல் வெளியிடப்பெற்றது